22.7.77. அன்று கொடுமுடி to ஈரோடு ரோட்டில்
அமைந்திருக்கும் செம்மடை வில்வவனம் ஸ்ரீ அண்ணன்
மார் கோவிலுக்குச் சென்றேன். என்னுடன் நண்பர்
பாஸ்கரனையும் அழைத்துச் சென்றேன். அந்தக் கோவிலுக்
குச் சென்று திரு. தங்கமுத்து சுவாமி அவர்களைப்பற்றிக்
கேட்டதில், அவர், அங்கிருந்து சுமார் 3 மைல்தூரத்
தில் (கொடுமுடி to ஈரோடு ரோட்டில்) உள்ள வெள்-
ளோட்டாம்பரப்பு எனும் ஊரில், அவருடைய இல்லத்
தில் இருப்பார். அங்கு சென்றால்தான் அவரைப்பார்க்
கலாம் என்று கூறினார்கள். பிறகு அங்கிருந்து
பஸ்மூலம் வெள்ளோட்டாம்பரப்பிற்கு சென்றோம்.
தங்கமுத்து சுவாமி அவர்களை சந்தித்து அண்ணன்மார்
கதை ஏட்டுச்சுவடி பற்றிக் கேட்டேன். அதற்கு அவர்
"அந்த ஓலை ஏடு வீரப்பூர் அருகில் உள்ள தரகம்-
பட்டி எனும் ஊரைச் சேர்ந்த ராஜலிங்க கவி
ராயரால் எழுதப்பட்டது. கரூர் பக்கத்திலிருந்து
உடுக்கைப் பாட்டுக்காரர்கள் இரண்டுபேர் (ஒருவர்
பண்டாரம் மற்றவர் நாவிதர்) ஒவ்வொரு ஆண்டும்
தைமாதம் இங்குள்ள அண்ணன்மார் கோவிலுக்கு
அண்ணன்மார் கதை படிக்க வருவார்கள். அவர்கள்
இங்கு தங்கியிருந்து தைமுதல் மாசிமாதம்
சிவன்ராத்திரி வரை கதைபடிப்பார்கள். அந்தப்
பாட்டுக்காரர்கள் 'தங்கள் பகுதியில் அண்ணன்மார்
கதையின் ஏட்டுச்சுவடி' இருப்பதாக கூறினார்கள்.

அடுத்த ஆண்டு அவர்கள் இங்கு வரும்பொழுது அந்த
ஏட்டுப்பிரதியை வாங்கி வாருங்கள் என்று சொல்லி
அனுப்பினேன். அதன்படி அவர்கள் அடுத்த ஆண்டு இங்கு
வந்தபொழுது அந்த ஏட்டைக் கொண்டுவந்தார்கள்.
அதிலிருந்து நான் பிரதியெடுத்து (ஏட்டிலுள்ளபடியே)
இரண்டு முறை புத்தகமாக வெளியிட்டேன். அதன்பிறகு
K.P. பழனிசாமி (சக்திக்கனல்) அவர்கள் அந்த ஏட்டி
லிருந்து எடுத்தப்பிரதியிலிருந்து எடுத்து கதையை
அதிகப் படுத்தி 1971ம் ஆண்டு ஒரு புத்தகமும் அதைத்
தொடர்ந்து இந்த ஆண்டு (1977) ஒரு புத்தகம் வெளி
யிட்டுள்ளார். அந்த ஓலைச்சுவடி சுமார் 150
ஓலைகளைக் கொண்டது. அதாவது 300 பக்கங்கள்"
என்று கூறினர். நான் "அந்த ஓலைச்சுவடி இப்
பொழுது எங்கிருக்கிறது? அந்த ஓலைச் சுவட்டை
நான் பார்க்க ஆசைப்படுகிறேன்" என்று கேட்டேன்.
அதற்கு தங்கமுத்து சுவாமி அவர்கள் "அந்த ஓலைச்
சுவடி இப்பொழுது என்னிடமில்லை. ஒருவேளை கோவி
லில் இருந்தாலும் இருக்கலாம். கோவிலில்
பட்டப்பன் என்று ஒரு பூசாரி இருப்பார் அவரிடம்
கேளுங்கள்" என்று கூறினார். நல்லது என்று அவருக்
கு நன்றி கூறிவிட்டு திரும்பவும் அண்ணன்மார்
கோவிலுக்கு வந்து பட்டப்ப பூசாரி பற்றிக்
கேட்டதில் அவர் ஈ.ரோடு போய்விட்டார்
மாலைதான் வருவார் என்று கூறினார்கள். அங்கிருந்
து மற்ற பூசாரிகளிடம் ஓலைச்சுவடி பற்றிக்

கேட்டேன். அப்பொழுது கோவிலிலிருந்த நல்லசாமி
எனும் ஒருவர் "ஓலைச்சுவடி இப்பொழுது எங்கிருக்கிறது
என்பது பற்றிய முழுவிவரமும் கொளாநல்லி இட்டப்பாளையம்
சென்று K.P. சுப்பண்ண கவுண்டர் அவர்களைச் சந்தித்தால்,
விளக்கம் கிடைக்கும்" என்று கூறியதோடல்லாமல்
திரு. நல்லசாமி அவர்கள் என்னுடன் கூடவே இட்டப்
பாளையம் வந்து திரு. சுப்பண்ண கவுண்டர் அவர்களை சந்திக்க
ஏற்பாடு செய்தார். கொளாநல்லி இட்டப்பாளையம்
எனும் ஊர் கோவிலிலிருந்து சுமார் 1½ மைல்
தூரத்தில் இருக்கிறது. கோவிலிலிருந்து சைக்கிள்
மூலம் அங்கு சென்று சுப்பண்ண கவுண்டர் அவர்களைச்
சந்தித்து ஏட்டுப்பிரதி பற்றிக் கேட்டதில் அதற்கு அவர்
"அந்த ஓலைச்சுவடியை அந்தப் பாட்டுக்காரர்களிடமே
கொடுத்துவிட்டோம். அந்த பாட்டுக்காரர்களின்
ஊர் பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் அந்த ஏட்டுப்
பிரதியை வைத்துத்தான் சுவாமி கும்பிடுவது, குழந்தை
களுக்குப் பெயர் சூட்டுவது வழக்கமாம். அதனால்
யாரிடமிருந்து ~~ஏட்டுச்சுவடி~~ ஓலைச்சுவடி வாங்கி வரப்பட்ட
தோ அவர்களுக்கு ஓலைச்சுவடியைத் திருப்பிக்
கொடுக்க வேண்டுமென்றதால் ஏட்டுச்சுவடியை
பாட்டுக்காரனிடமே கொடுத்துவிட்டோம்
என்றும் நீங்கள் இவ்வளவு ஆர்வத்தோடு அதுபற்றிக்
கேட்பதால் இந்த ஆண்டு பாட்டுக்காரர்கள்
இங்கு வரும் பொழுதோ அல்லது அதற்கு முன்போ
அந்த ஏட்டைத் திரும்பவும் வாங்கிவரும்படி
கடிதம் எழுதுகிறேன். ஏடு கொண்டு வந்தால்

உங்களுக்கே கொடுக்கிறேன் நீங்கள் அதிலிருந்து
நகல் எடுத்துக் கொண்டு திருப்பிக் கொடுங்கள்" என்று கூறினர்.
அதற்கு நான் "மிகவும் சந்தோஷம், நன்றி" என்று கூறிய
துடன் ஏடு கிடைப்பதற்கு முடிந்தவரை விரைவில்
ஏற்பாடு செய்து உதவுமாறு கேட்டுக் கொண்டு
ஒவ்வொரு ஆண்டும் கோவிலுக்கு கணக்கு படிக்க வரும்
~~கை~~ அந்த பாட்டுக்காரர்களின் முகவரி இருந்தால்
கொடுங்கள்" என்று கேட்டேன். அதற்கு அவர்
"அந்த முகவரி என்னிடம் இல்லை. வேறு யாருக்கா
வது தெரிந்தால் அறிந்து உங்களுக்குத் தெரிவிக்கிறேன்"
என்றார். நான் சரி என்று கூறிவிட்டு "திரு. தங்க
முத்து சுவாமி அவர்கள் அந்த ஏட்டிலிருந்து
முதன்முதல் பதிப்பெடுத்து வெளியிட்ட புத்தகத்தின்
நகல் இருந்தால் கொடுங்கள்" என்று கேட்டேன்
அவர் "அந்தப் புத்தகத்தின் நகல் கோவிலிலிருந்
தாலும் சரி அல்லது இங்கு வேறு யாரிடமாவது
இருந்தாலும் வாங்கி அனுப்பி வைக்கிறேன்"
என்று கூறினர். அவரிடம் என் முகவரியைக்
கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். திரு. K.P. சுப்பண்ணை
கவுண்டர் அவர்கள் நல்ல வசதி படைத்தவர் அத்துடன்
என்னை இனிய முகத்துடன் வரவேற்று நான்
கேட்டவற்றிற்கு நல்ல பதில் கொடுத்தார். திரு.
தங்கமுத்து சுவாமிகளும் இனிய முகத்துடன்
வரவேற்று உரையாடினர். தங்கமுத்து சுவாமி
என்பவருக்கு சுமார் 80 வயதுக்கு மேலிருக்கும்.

திரு. தங்கமுத்து சுவாமி அவர்களிடமும் அவர்
வெளியிட்ட புத்தகத்தின் நகல் ஒன்று கூட இல்லை.
சுப்பண்ண கவுண்டர் அவர்களை சந்தித்த பின் கோவை
க்கு வந்தோம். திரு. R. நல்லசாமி (எங்களுடன்
ஓட்டப்பாளையம் வந்தவர்) அவர்களிடமும் என்
முகவரியைக் கொடுத்து பாட்டுக்காரர்களின் முகவரி
கிடைத்தால் எனக்கு உடனே தெரிவிக்கும்படியும்,
திரு. தங்கமுத்து சுவாமி அவர்கள் வெளியிட்ட
புத்தகம் ஒன்று எப்படியாவது எனக்கு அனுப்ப
வேண்டும் என்று கூறி புத்தகத்தின் விலையைக்
கூறினால் நான் கொடுத்துவிட்டுப் போகிறேன்
என்றேன். அதற்கு திரு. நல்லசாமி அவர்கள்
அதற்கு பணம் வேண்டாம் அத்துடன் திரு. சுப்பண்ண
கவுண்டர் அவர்களை நீங்கள் சந்தித்து விபரம்
கூறியபின் கண்டிப்பாய் பணம் வாங்கமாட்டோம்.
முன்பே தெரிந்திருந்தால் நீங்கள் வந்தவுடன் இங்கு
வாங்கிய புத்தகத்திற்கே (K.P. பழனிசாமி சக்திகனல்
அவர் இந்த ஆண்டு வெளியிட்ட அண்ணன்மார்
கதையின் நகல் என்னிடமில்லையாதலால் அதை
கோவையில் விற்பனைக்கிருந்ததால் Rs. 10 கொடுத்து
ஒரு புத்தகம் வாங்கினேன் அது பற்றி திரு. நல்ல
சாமி இரிப்பாட்டு) கூட பணம் வாங்கியிருக்க
மாட்டார்கள் என்று கூறினார். அப்பொழுது
திரு. சுப்பண்ண கவுண்டர் அவர்கள் கோவையின்
முக்கியமான நிர்வாகஸ்தர்களில் ஒருவராக

இருப்பார்போல் தெரிகிறது என்று நினைத்தேன்.
பிறகு திரு. நல்லசாமி அவர்களிடமும் கோவிலிலிருந்த மற்றவர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு நாங்கள் அப்படியே ஈ.ரோடு சென்று எழுதுவதற்குத் தேவையான பேப்பர் மற்றும் கார்பன் பேப்பர் ஆகியவற்றை வாங்கிக் கொண்டு வெப்பாளையம் வந்து சேர்ந்தோம்.

அங்கு கிடைத்த விளக்கத்திலிருந்து திரு. தங்க முத்து சுவாமி அவர்கள்தான் முதன் முதல் அந்த ஓலைச்சுவடியிலிருந்து அண்ணன்மார் கதையை எடுத்து இரண்டு முறை புத்தகம் வெளியிட்டிருக்கிறார். அதன் பிறகுதான் சக்திகனல் K.P. பழனி சாமி அவர்கள் கதையை மேலும் பெருக்கி இரண்டு முறை புத்தகம் வெளியிட்டுள்ளார். தங்கமுத்து சுவாமி அவர்கள் ஏட்டிலிருந்து எடுத்து அச்சுக்குக் கொடுத்த பிரதியொன்று ~~[illegible]~~ கொடுமுடி உழவன் அச்சகத்தில் இருப்பதாக திரு. தங்கமுத்து சுவாமி அவர்கள் கூறினார்.

செம்மடை வில்வ வனத்தில் இரண்டு அண்ணன்மார் சுவாமி கோவில்கள் உள்ளன. ஒன்று ஆதியிலிருந்து இருப்பது. மற்றொன்று புதிதாக கட்டப்பட்டது. புதிதாக கட்டிய கோவில் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்தான் கட்டப்பட்டது என்றும்

கோவிலுக்குச் சேர்ந்த கவுண்டர்களில் ஒற்றுமை இல்லாததால் ஒரு பிரிவினர் பிரிந்து தனியே கோவில் கட்டிக் கொண்டார்கள் என்று கூறினேன். இதுபற்றி முழு விபரமும் கேட்க நேரமில்லாததால் முடியவில்லை.

ராமசாமி நாவிதனின் அண்ணன்மார் கதையில் அண்ணன்மார்களின் தங்கையை "பார்வதி" என்று ராமசாமி கூறவில்லை. "பருவதி" என்றும் 'பருவதியா' என்றும் குறிப்பிட்டிருப்பார்.
ஆகவே 'பார்வதி' அல்ல 'பருவதி' என்றே கூறலாம்.
மேலும் பருவதி என்பது அண்ணன்மார்களின் தங்கையின் பெயர் அல்லவென்று நினைக்கிறேன். காரணம் அக்கதையில் வரும் பாத்திரமான தாமரை (or தாமரையாக்கவுண்டச்சி) யைக் கூட பருவதி, பருவதியா என்று ராமசாமி குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார் என்று நினைக்கிறேன். பருவதியா என்பதை பேச்சு மொழியால் பர்வதியா என்று நான் ராமசாமி உச்சரித்ததுபோல் எழுதியிருப்பேன். ஒருவேளை பர்வதியா என்பதை நீங்கள் பார்வதி என்று நினைத்துக் கொண்டீர்களோவென்னவோ. ~~பர்~~ பருவதி or பருவதியா என்பதற்கு அர்த்தம் என்ன? என்பது தெரியவில்லை. தமிழில் பார்வதி, பருவதம் (or பர்வதம்) என்று பெண்களுக்கு பெயர் வைப்பதுண்டு. ஆனால் கதையில் தங்கையின் பெயரல்ல அது. தாமரையையும் பின்னர் தங்கையையும் பருவதியா என்று ராமசாமி

இக்கதையால் வெளிப்படுவதுபோல ஒருவேளை கற்புள்ள மங்கையரையும் ஒழுக்கமுள்ள மங்கையரையும் இழிப்பிடும் ஒரு சொல்லாக இருக்குமோ என்னவோ தெரியவில்லை. ராமசாமி நாவிதன் தற்சமயம் இங்கு (ஜெயப்பூரியத்தில்) இல்லை. அவர் இங்கு வந்தவுடன் அதற்கு விளக்கம் கேட்பேன். ஆனால் ராமசாமியால் இதற்கு என்ன விளக்கம் கூறமுடியும் என்று தெரியவில்லை.

முன்பு ராமசாமி கூற நான் எழுதிய அண்ணன்மார் கதையில் சொல்பிழை மற்றும் எழுத்துப் பிழைகள் இருந்தாலும் இருக்கலாம். சொல்பிழை, எழுத்துப் பிழை இருந்தால் கதையின் அர்த்தமே மாறிவிடும். அண்ணன்மார் கதை சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. அப்பொழுது எனக்கு போதிய அனுபவம் இல்லாததால் பிழைகள் இருக்கும். ஆகவே தயவு செய்து உங்கள் உதவியாளரிடம் கூறி நன்கு கவனிக்கச் சொல்லவும். பிழையிருந்தால் திருத்தவும். சந்தேகம் இருந்தால் உடனே எனக்கு எழுதவும். அண்ணன்மார் கதைபற்றி நீங்கள் எழுதவிருக்கும் புத்தகத்தில் என் தவறுதலால் பிழை ஏற்பட்டுவிடுமோ என்று பயப்படுகிறேன். ஆகவே எழுதப்பட்ட பேப்பர்களை நன்கு கவனிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். சந்தேகப்படும் பகுதிகளைக் குறிப்பிட்டு உடனே எனக்கு எழுதவும்.

அதுமட்டுமல்ல நான் எழுதிய (transcribe செய்த) சிறு கதைகளைப் படிக்கும் போதும் எழுத்துப்பிழை, சொற்பிழை வருகிறதா என்பதை கவனமாகக் கவனிக்கவும். பிழையிருந்தால் மன்னிக்கவும்.

இறுதியாக இரண்டு சுழி ன, னா வருவதற்கு மூன்று சுழி ண, ணா போட்டிருந்தாலும் பொறுப்பேன். ல, ள க்குப் பதிலாக ழ, ழை ள, ளா போட்டிருந்தாலும் பொறுப்பேன் இதையெல்லாம் கவனிக்கவும். அல்லது உங்கள் உதவியாளர் ஒரு தமிழராக இருப்பது மிகவும் நல்லது. உங்கள் உதவியாளரிடம் கூறி நான் இறுதிப்பட்டது போல் சொல் பிழை, அல்லது எழுத்துப் பிழை வந்தால் திருத்தச் சொல்லும்படி கேட்கவும். அத்துடன் சந்தேகம் ஏதாவது இருப்பின் உடனே கடிதம் எழுதவும் நான் பதில் கொடுப்பேன்.